16.02.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 7 /2022 ) திருமதி.தாமரைச்செல்வி.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) பிராது தபசில் சொத்துக்கள் திரு.கிருஷ்ணன் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்று சொல்லுவது உண்மை இல்லை என்றால் உண்மை தான். மேற்படி திரு.கிருஷ்ணன் கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்ற போது வாரிசாக செல்லையா,கருப்பணன்,வெள்ளையப்பன் ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொல்லுவது உண்மையல்ல என்றால் செல்லையா என்பவரை மட்டும் தான் எனக்கு தெரியும் அவர் எனது தாத்தா ஆவார். சுப்பையா, வெள்ளைச்சாமி ஆகியோர்கள் கிருஷ்ணன் உறவினர்கள் வெள்ளைச்சாமி என்பவர் தான் பிரதிவாதியின் பாட்டனார் என்றால் இல்லை. நிருபண வாக்குமூலம் பாரா 3ல் கருப்பணன்,வெள்ளையப்பன் ஆகியோர்கள் வாரிசுகள் இன்றி காலம் சென்றுவிட்டார்கள் என்று சொல்லுவது உண்மையல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணன் காலம் சென்ற பின்னர் அவரதுஒரே மகனான செல்லையா என்பவருக்கு வாரிசு அடிப்படையில் கிடைக்கப்பெற்றதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல அவர்மட்டும்தான் வாரிசு ஆவார். செல்லையா என்பவர் நீண்ட நெடிய காலமாக தபசில் சொத்தை ஆண்டு அனுபவம் செய்து வருவதாக சொல்லுவது பொய் என்றால் தவறு அவர் தான் அனுபவம் செய்துவருகிறார். வழக்கின் வாதி மட்டும் வாரிசாக வைத்து விட்டு யாதொரு ஆவணமும் எழுதிவைக்காமல் காலம் சென்றுவிட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் தவறு உண்மைதான். பிராதுதபசில் சொத்தில் வாதியின் தகப்பனார் செல்லையா உயிருடன் இருந்த போது பாசிபயிர்,சோளம் பயிர்செய்து அனுபவம் செய்து வந்தாக சொல்லுவது உண்மையல்ல என்றால் தவறு உண்மைதான். பிரதமர் பயிர் காப்பீட்டுதிட்டத்தின் கீழ் 2018,2019,2020 காலங்களில் நான் பயிர்காப்பீடு பெற்றுவந்ததாக சொல்லுவது உண்மையல்ல என்றும் அது செல்லையா பெயரிங்ல் தான் இருந்து வந்தது என்றால் தவறு சொத்து செல்லையா பெயரில் இருந்தது பயிர்காப்பீடு நான் தான் பெற்றுவந்தேன். வழக்கு தபசில் சொத்து உரிமை கோருவதற்கு வாதி பெயருக்கு எந்த உரிமை ஆவணமும் இலலை என்றாலும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன்.

2) வாதியிடம் எந்தக்காலத்திலும் காற்றாலை நிறுவனம் அமைப்பதற்கு கேட்டு வரவில்லை என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் இந்த வழக்கின் தபசில்

சொத்திற்குரிய உரிமையாளர் இல்லை என்றால் உரிமையாளர் தான். வழக்கில் கண்ட செல்லையா வாதியின் தகப்பனார் என்றும் எங்களின் முன்னோர்கள் என்று கோருவது உண்மையல்ல என்றால் சரியல்ல. செல்லையாவின் தந்தை கிருஷ்ணன் என்பது உண்மையல்ல என்றால் தவறு. வாதி தான் செல்லையாவின் வாரிசு என்பதை காட்டக்கூடிய எந்த ஒரு வாரிசு சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குதபசில் சொத்தை அடைவதற்கு திட்டமிட்டு ஆவணங்கள் உற்பத்தி செய்து கொண்டே இருந்து வருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. வாதிக்கு தபசில் சொத்தில் உரிமைகொண்டாடும் எந்தவித ஆவணமும்இல்லை என்றாலும் வாதி தாவாச்சொத்தை பராமரிப்பதற்கு மட்டும் பிரதிவாதியால நியமனம் செய்யப்பட்டவர் என்றும் அதனால் தான் வரி செலுத்துபவரின் பெயர் வாதியின் பெயராக எழுதப்பட்டுள்ளது என்றும் அதனால் தான் பின்னர் பிரதிவாதிக்கு தெரியவந்தது தாவாச்சொத்திலிருந்து வாதியை வெளியேற்றப்பட்டார் என்றால் சரியல்ல வெளியேற்றப்பட்டது உண்மை. பிரதிவாதியின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து அபகரிக்க முயன்றதால் தாவாச்சொத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்றால் சரியல்ல. கடந்த 07.10.2021 அன்று நடைபெற்றதாக சொல்லும் சம்பவமும் உண்மையல்ல என்றால் சரியல்ல. அது போன்ற ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் இந்த வழக்கிற்காக அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திலிருந்து வாதியை வெளியேற்றப்பட்டதால் பொய்யாக பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிக்கு எந்தவித முதல்நோக்கு உரிமையும் சமநோக்கும் இல்லை என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,

கோவில்பட்டி,
16.02.2026.